**OS.No.74/2024, Dated 13.03.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 13th day of March 2026.

**வா.சா.1 – ஏழுமலை த/பெ பெருமாள் வரவழைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் சாமிக்கண்ணுவிடம் நிலம் வாங்கியுள்ளேன். தேசிங்குவும் சாமிகண்ணுவின் தம்பி சம்பத்திடம் நிலம் வாங்கியுள்ளார். சின்னப்பா பிள்ளைக்கு 3 பிள்ளைகள் ஆவர். மொத்த சொத்தும் சாமிகண்ணுவின் பெயரில் தான் பட்டாவாக இருந்தது என்றால் சரிதான். நடராஜன் மற்றும் சாமிகண்ணுவிடம் இருந்து தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன். நான் 2005 ஆம் ஆண்டு கிரையம் வாங்கினேன். நான் சாமிகண்ணு மற்றும் நடராஜன் ஆகியோரிடம் வாங்கிய நிலம் போக 250 சதுர மீட்டர் நிலத்தை தேசிங்கு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் கிரையம் வாங்கியுள்ளார் ஆனால் நான் ஏற்கனவே 300 சதுர மீட்டர் கிரையம் வாங்கியிருந்தேன். மேற்படி தேசிங்கு பெயருக்கு 250 சதுர மீட்டருக்கு பட்டா எண். 383 என்று பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ பதிவேட்டிலும் மேற்படி இடத்திற்கு தேசிங்கு பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது செல்லாது. எனது தாவாவில் சொத்து மொத்தம் சாமிகண்ணு பெயரில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சாமிகண்ணுவின் இருந்து சூது மார்கமாக தேசிங்கு கிரையம் வாங்கியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தேசிங்கு 2012 ஆம் ஆண்டு கிரையம் வாங்கியது அப்போதே எனக்கு தெரியுமா என்றால் அப்போது எனக்கு தெரியாது அளக்கும் போது தான் எனக்கு தெரியவந்தது. தேசிங்கு கிரையம் வாங்கிய சொத்தை அவர் அனுபவித்து வருகிறாறா என்றால் அனுபவித்து வருகிறார். தேசிங்குவின் சொத்தை சுற்றி மூன்று புறங்களிலும் என்னுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். என்னுடைய மேல்புறம் உள்ள இடத்திற்கு கீழ்புறம் இருந்து செல்வதற்கும் மேலும் கீழ்புறம் உள்ள இடத்திற்கு மேல்புறத்தில் இருந்து செல்வதற்கும் தேசிங்கு காலிமனை வழியாக தான் சென்று வருகிறேன் என்றால் சரிதான். நான் தேசிங்குவிடம் அவருடைய

இடத்தை எனக்கு கிரையம் கொடுக்கும்படி கேட்டேன் என்றாலும் அதற்கு அவர் மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் கிரையம் கேட்டு அவர் மறுத்துவிட்டதால் அவர் 50 சதுர மீட்டர் கூடுதலாக கிரையம் வாங்கிவிட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாமிகண்ணுவிடம் தேசிங்கு வாங்கியுள்ள இடத்தில் அவர் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். தேசிங்குவின் இடத்தை எப்படியாவது வாங்கிவிடவேண்டும் என்ற ஒரே நோக்கில் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தேசிங்கு முறையாக 250 சதுர மீட்டர் கிரையம் வாங்கி அதில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும், எனவே என்னுடைய தாவா நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2012 ஆம் தேசிங்கு வாங்கி 2014 ஆம் ஆண்டு அங்கு வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.03.13 16:47:01 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி